பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 11 வெள்ளிக்கிழமை 27.08.2021 கதிர் 295

இனி இது ரகசியம் அல்ல!

வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைக்கும் அற்பத்தனத்தையே தனது பிரதான அரசியலாக முன்னெடுக்கின்றது அமுல்பேபி அண்ட் கோ என்பது பகிரங்க இரகசியம்தான்.

இப்போது கொரோனாத் தடுப்புக்கான பொது பக்கம்02 »

## நாட்டை நீண்ட நாள்கள் மூடிவைக்க முடியாதாம்

### பிரதமர் மஹிந்த கூறுகின்றார்



நாட்டை நீண்டகாலத்துக்கு மூடிவைப்பதென்பது நடைமுறை சாத்தியமற்றவிடயமாகும். எனவே, நாட்டை மீண்டும் திறக்கும் போது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை ☞2

## பிரதான வைத்தியசாலைகளில் நிரம்பி வழியும் தொற்றாளர்கள்

### கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவில் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட 350 பேருக்கு கொரோனா

கொழும்பு தேசிய வைத்தியசாலைஉள்ளிட்டபிரதானவைத்தியசாலைகளின் கொரோனா சிகிச் சைப் பிரிவில் தொற்றாளர்கள் நிரம்பி வழிகின்றனர் என்று வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொற்றாளர்களில் அதிகமானவர்களுக்கு ஒட்சிசனின் உதவியுடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சுமார் 700 தொற்றாளர்களும், ஐ.டி.எச்சில் 240 தொற்றாளர்களும், காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் 222 ☞2

# முதல் தடவையாக ஒரே நாளில் 200ஐ கடந்தது கொரோனா சாவு



## 8 ஆயிரத்தை தாண்டியது மொத்த காவு

இலங்கையில் கொரோனாப் பெருந்தொற்று நாளாந்தம் கோரத்தாண்டவமாடி வருகின்றது. சாவுகளின் எண்ணிக்கை தினந்தோறும் அதிகரித்து வருகின்றது. அந்தவகையில், நாளொன்றில் முதல் தடவையாக 200ஐத் தாண்டிய கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. அதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் 209 பேர் கொரோனாத் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. ☞2

### முன்னாள் பெண் அதிபர் ஒருவர் உட்பட

## யாழில் மேலும் 6 பேர் கொரோனாவால் பலி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முன்னாள் பெண் அதிபர் ஒருவர் உட்பட மேலும் 6 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்., கொழும்புத் துறையைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவரும், கொழும்புத்துறையைச் சேர்ந்த 76 வயதுடைய பெண் ஒருவரும் நேற்று உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலமாக ☞10

## இலங்கையில் நேற்று மட்டும் 4,602 பேருக்குக் கொரோனா!

### நாளொன்றில் அதிக தொற்றாளர்கள் அடையாளம்



இலங்கையில் நேற்று 4 ஆயிரத்து 602 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதுவே நாளொன்றில் இதுவரை அடையாளம் காணப்பட்ட அதிகளவிலான தொற்றாளர்களின் எண்ணிக்கையாகும்.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 12 ஆயிரத்து 370 ஆக அதிகரித்துள்ளது ☞10

## வவுனியாவில் கொரோனா உச்சம்; நேற்று 244 பேருக்கு தொற்று உறுதி

### 6 மாத குழந்தை உட்பட மூவர் உயிரிழப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாமாவட்டத்தில்நேற்று 244 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன், மூவர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில் வவுனியா, ☞2

## வடக்கில் முதன்முறையாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நிறைவு

### விபத்தில் மூளைச் சாவடைந்த இளைஞனின் குடும்பம் கொடை



(இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுநீரக உறுப்புமாற்றுஅறுவை சிகிச்சை ☞10

## பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று

### 4 கோடி ரூபா கஞ்சாவுடன் இருவர் கைது!

இந்தியாவிலிருந்து படகு ஒன்றில் யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி வரப்பட்ட சுமார் 4 கோடி 10 இலட்சம் ரூபா பெறுமதியான 139 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்றுக் காலை 6 மணிக்கு இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ☞10

## யாழில் பொது இடங்களில் சந்தைகள் திடீர் முளைப்பு

### போக்குவரத்துக்கு இடையூறு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகள் மூடப்பட்ட நிலையில் பொது இடங்களில் பல சந்தைகள் திடீரென முளைப்பதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்.நகரின் 6 ஆம் ☞10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடக்கத்தை அடுத்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபாவை வழங்குவது என்று அரசு முடிவெடுத்தது அல்லவா? பிறகென்ன, வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும் அரசியலை அதிலும் தொடங்கி விட்டது அமுல்பேபி அண்ட் கோ.

சம்பந்தப்பட்ட பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர்கள் மூலமே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. அந்தக் கிராம சேவையாளர்கள் அவற்றை வழங்கும் போது அமுல்பேபி அண்ட் கோவின் பிரதிநிதிகளும் நேரில் போய் பிரச்சன்னமாகியிருந்து - வழமை போல - ஏதோ அந்தப் பணமும் அமுல்பேபி அண்ட் கோவினால் வழங்கப்படுவது போல ஏகத் தர்பார்.

சுன்னாகத்தில் ஒரு கிராம சேவையாளர்கள் அம்மா, இந்தக் கெடுபிடி தாங்காமல் தர்பார் கொம்பனியை ஏசி விரட்டியமையுடன் கொடுப்பனவு வழங்கும் வேலையை இடையில் கைவிட்டு, புத்தகங்கள்,கோவைகளை எல்லாம் கட்டிக் கொண்டு போய்விட்டார் என்று தகவல்.

மேற்படி இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பான சுற்று நிரூபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு மற்றும் கிராமியக் குழுவினது ஒத்துழைப்புடன் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படலாம் என்று குறிப்பிட்டிருப்பது உண்மைதான்.

ஆனால், இம்முறை மாவட்டங்கள் தோறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, அதன் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினரோ, தலைவர்களோ நியமிக்கப்படவில்லை. அதனால் யாழ்.மாவட்டத்தில் அவை அனைத்தும் தமது தர்பாருக்கு உரியது என்று அதிகாரத்திமிர் பிடித்து அலைகின்றது நமது கொம்பனி. அதன் விளைவு தான் இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பனவும் தங்களுடையதே என்று காட்டும் அதிகாரக் கெடுபிடியும்.

இந்தக் கொடுப்பனவிலும் கையடிக்கும் ஒரு குறுநில மன்னரை, வளர்த்து வைத்திருக்கும் கோட்டா குழுவினருக்கு தமிழர்களின் மனதை வெல்வது சாத்தியப்படப் போவதில்லை என்பது நிச்சயம்.

★ ★ ★

இலங்கைத் தமிழர் அரசியலில் தொடர்ந்து அதிகம் ஈடுபாடு காட்டி வரும் புலம்பெயர்தமிழர்ஒருவர்நேற்று அழைப்பு எடுத்தார்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு வசதியாக தேர்தல் சட்டங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையை எடுங்கள் என்று அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கோரிக்கை விடுக்கின்றார் என நேற்றைய ‘காலைக் கதிர்’ பத்திரிகையில் வந்த தலைப்புச் செய்தி குறித்துக் குறை கூறினார்.

*“அரசு எந்தத் தேர்தலையும் வைக்கப் போவதில்லை என்பது உறுதி. அப்படி இருக்கையில் கூட்டமைப்பு ஏன் இந்தக் கோரிக்கையை இந்தக் கட்டத்தில் போய் ஆட்சித்தலைமைக்கு வைக்க வேண்டும்? எனக்குக் காரணம் விளங்கவில்லை”* - என்றார் அவர்.

*“அரசு அந்தத் தேர்தலை வைக்கின்றதோ, இல்லையோ, தனது நிலைப்பாட்டை கூட்டமைப்பு வெளிப்படுத்துவதில் என்ன தவறு இருக்க முடியும்.?”* - என்று கேட்டேன் நான்.

*“தவறில்லைத்தான். ஆனால் ஏன் அரசிடம் அப்படி ஒரு கோரிக்கை, அதுவும் ஏன் இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாக கேட்க வேண்டும்?”* - என்றெல்லாம் கேள்வி எழுப்பினார் அவர்.

நான் ஆறுதலாக எனக்குத் தெரிந்த தகவலை அவருக்குத் தெரியப்படுத்தினேன்.

சில நடுநிலையாளர்கள் அணி ஒன்று அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தது. பல விடயங்கள் பற்றியும் மனம் விட்டு ஜனாதிபதியுடன் உரையாடியது அக்குழு. ஜனாதிபதியும் மனம் திறந்து பேசினாராம்.

மாகாண சபைத் தேர்தலை நேரத்துடன் நடத்தினால் - மாகாண நிர்வாகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளினால் கையாளப்படும் நிலைமை ஏற்பட்டால் - சிறுபான்மையினர், குறிப்பாக தமிழர்கள், கொஞ்சம் திருப்தியடைவார்கள் அல்லவா? - என்றொரு கேள்வி அப்போது ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டது.

*“ஆம். அது சரிதான். ஆனால் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்ற கோரிக்கை - வலியுறுத்தல் - பகிரங்கமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்தும் கூட வரவில்லையே. தமிழர் ஆதரவு தங்களுக்குக் குறைந்து, தமது வாக்குகள் பிரிந்துள்ள இச்சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற விருப்பம் கூட்டமைப்புக்குக் கூட இல்லை என்றே நான் அறிகின்றேன். அப்படி இருக்கையில் அத்தேர்தல் குறித்து நாம் ஏன் அவசரம் காட்ட வேண்டும்?”* - என்ற கேள்வி ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டதாம்.

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனுக்கு அந்தத் தகவல் தெரிய வந்தமையை அடுத்தே, மாகாண சபைத் தேர்தல்கள் எந்தக் காரணம் கொண்டும் பின் தள்ளப்படக் கூடாது என்பதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்பதை நிலைநிறுத்தி, உறுதிப்படுத்தவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது என்று நானறிந்த தகவலை அந்தப் புலம்பெயர் தமிழருக்குச் சொன்னேன்.

சுமந்திரனைக் குறை கூறிய அவரின் சுருதி மாறியது. சுமந்திரனை மெச்சத் தொடங்கினார் அவர். அவை சுமந்திர புராணமாகி விடும் என்பதால் தவிர்த்து நிறுத்திக் கொள்கிறேன்.

- மின்னல் -

---

## நாட்டை நீண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுத்தார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தி நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கு சுகாதாரத் தரப்பினர், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் முன்கள பணியாளர் கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். எனவே, நாட்டு மக்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

---

## பிரதான வைத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களும், களுபோவில வைத்தியசாலையில் 300 தொற்றாளர்களும், வெலிசறை வைத்தியசாலையில் 182 தொற்றாளர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளடங்கலாக நிர்வாகப் பிரிவில் 350 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவு 24 மணித்தியாலமும் இயங்கி வருவதுடன் அதிதீவிர சிகிச்சை பிரிவில் 30 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவசர சிகிச்சை பிரிவுகள் அனைத்தும் நிரம்பி வழிகின்றன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நாளொன்றுக்கு 10 -15 தொற்றாளர்கள் சிகிச்சை பலனின்றி மரணமடைகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 244 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், செட்டிகுளம் பகுதியில் இருந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 6 மாத குழந்தை சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளது. அத்துடன், வவுனியா, கற்குழி பகுதியில் வசிக்கும் 76 வயது நபர் ஒருவர் வீட்டில் மரணமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார். அவரிடம் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவற்றுடன், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாக சேர்க்கப்பட்ட 86 வயதுடைய சமயபுரம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். இந்நிலையில் மரணித்த மூவரது உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

---

## முதல் தடவையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு மரணித்தவர்களில் 108 ஆண்களும், 101 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 31 ஆண்கள், 15 பெண்கள் என 46 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 163 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 77 ஆண்களும், 86 பெண்களும் அடங்குகின்றனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 8,157 ஆக அதிகரித்துள்ளது.

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 05 - 03 - 1971 |  | 26 - 08 - 2021 |

### அமரர் Lion.சண்முகவேல் விக்னேஸ்வரன்

(Global Enterprises உரிமையாளர்)
(Computer Engineer)

யாழ்.நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகவேல் விக்னேஸ்வரன் நேற்று (26.08.2021) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், பத்மாவதி தம்பதிகளின் புதல்வரும் சிவகுமார் (மணி), புஷ்பராஜா, கிருஷ்ணவேணி, பாலசுப்ரமணியம், மனோன்மணி, ஹேமலதா (லதா), சந்திரகலா, ஆனந்தராஜா, கலைவாணி (வாணி) ஆகியோரின் சகோதரரும், அருந்ததி, பாலசுப்ரமணியம், சுபத்திரா, ஆனந்தன், சுதர்சன், கிருஷ்ணதாஸ், சுஜிதா, கிரிகரன் ஆகியோரின் மைத்துனரும் சுஜித்திரன், அஜந்தன், ஜனனி, ஆரணி, இந்திரா, நிர்த்திகன் ஆகியோரின் மாமனாரும் ஜதீசன், ஜதுசன் ஆகியோரின் பெரியப்பாவும் அபிஷனா, காயத்திரி, கௌதமன், மதுரா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:-

| | | |
|---|---|---|
| மணி | - | 0033768601671 |
| புஷ்பா | - | 0015144639992 |
| பாலா | - | 00447539267343 |
| லதா | - | 0012899803740 |
| கலா | - | 0014163583714 |
| ராஜா | - | 00447816160766 |
| வாணி | - | 0094763528537 |
| கரன் | - | 0094776760073 |
| அஜந்தன் | - | 0094769199144 |

தகவல்:-
குடும்பத்தினர்

Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
SIC
Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road,
Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

காலைக்கதிர் Kalaikkathir

# பகிடிவதைச் சம்பவங்களை தடைசெய்ய சட்டதிருத்தம்

## கல்வி அமைச்சு தீர்மானம்

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறுகின்ற பகிடிவதை மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யக்கூடிய வகையில் சட்டதிருத்தங்களை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுவரைகாலமும் பல்கலைக்கழக அதிகாரிகளால், பொலிஸாரிடம் முறைப்பாடு செய்து சட்டத்தை அமுல்படுத்த முடியாத நிலை இருந்ததாக கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் பிற வன்முறைச்சம்பவங்களைத்தடை செய்வதற்கான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் தலைமை நிர்வாக அதிகாரி அல்லது அவரது பிரதிநிதி பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ய முடியுமான வகையில் சட்டங்கள் திருத்தப்படும். என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# கொவிட் தடுப்பூசி வழங்கும் பணிகளை சுகாதாரத் தரப்பினரிடம் ஒப்படைக்குக!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

நாட்டில் தற்போது உருவாகியுள்ள நான்காவது கொவிட் அலையை முகாமைத்துவம் செய்வதற்காக நாடு முடக்கப்பட்டுள்ளது.

முடக்கத்தின் போது தனிநபர் இடைவெளியை 90 வீதம் பேணுவதால் மாத்திரமே அதன் பயனைப் பெற வேண்டும். ஆனால் தற்போது 90 வீத தனிநபர் இடைவெளி பேணப்படவில்லை.

எனவே தடுப்பூசி வழங்கும் பணிகளை முழுமையாக சுகாதாரத் தரப்பினரிடம் ஒப்படைத்துவிட்டு, போக்குவரத்து கட்டுப்பாடுகளை கண்காணிக்கும் அதிகாரிகள் அதில் முழு அவதானத்தையும் செலுத்த வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக்குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த (புதன்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

# 500 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளுடன் 2 இயந்திரப் படகுகள் புத்தளத்தில் மீட்பு

புத்தளம் கற்பிட்டி இப்பந்தீவு பகுதியில் 500 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளுடன், இரண்டு டிங்கி இயந்திரப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படையினர் இப்பந்தீவு பகுதியில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே குறித்த உலர்ந்த மஞ்சள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சந்தேகத்திற்கிடமான டிங்கி இயந்திரப் படகு ஒன்றை கடற்படையினர் பரிசோதனை செய்த போது அந்த படகில் 15 உரமூடைகளில் மறைத்து வைக்கப்பட்ட 500 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு டிங்கி இயந்திரப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட உலர்ந்த மஞ்சள் மற்றும் டிங்கி இயந்திரப் படகுகள் என்பன உரிய சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய கொரோனா தொற்று நீக்கி தெளிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்படும் வரை கடற்படையின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன எனவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, கற்பிட்டி பிரதேசத்தில் கடந்த வாரம் மட்டும் 1,520 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், நான்கு பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி கற்பிட்டி கிளித்தீவு பகுதியில் 370 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், 19 ஆம் திகதி இப்பந்தீவு பகுதியில் 650 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளுடன் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனியின் விலை 50 ரூபா எகிறியது!

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் திடீர் என ஒரு கிலோகிராம் சீனியின் விலை 50 ரூபாவால் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் 160 ரூபாவாக இருந்த ஒரு கிலோ சீனியின் விலை இந்த வாரம் 210 ரூபாவாக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு நியாயமற்றது என்றாலும், அது தொடர்பில் தன்னால் எதுவும் செய்ய முடியாது என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார். அதிகபட்ச விலையில் பொருள்களை விற்பவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை அதிகரிப்பது குறித்த சட்டம் நாடாளுமன்றின் அங்கீகாரத்துக்காக காத்திருக்கின்றது. இந்நிலையில் தன்னிச்சையான விலை உயர்வுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன கூறினார்.

# தொற்றுக்குள்ளான குழந்தைக்கு திடீரென உடலில் ஒட்சிசன் அளவு குறைவடையும்!

கொரோனாத் தொற்றுக்குள்ளான குழந்தை தனது நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபடும் போது எந்த ஒரு நோய் அறிகுறிகளும் இல்லாமல், திடீரென்று அதனது உடலில் ஒட்சிசன் அளவு குறைவடையும் நிலையை தற்போது காணக்கூடியதாக உள்ளது என்று சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

அதாவது, மூச்சு விடுவதில் சிரமம் அல்லது நடக்க சிரமப்படுதல் போன்ற எந்த அறிகுறியும் இல்லாமல் ஒரே நேரத்தில் உடலில் ஒக்சிஜன் அளவு குறைவடைவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் நளின் கிதுல்வத்த கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

குழந்தையின் ஒட்சிசன் அளவு இயல்பாக இருக்கும் சந்தர்ப்பத்தில், குழந்தை ஓடும் போதும் உடல் செயற்பாடுகளில் ஈடுபடும் போதும் உடலில் ஒட்சிசன் அளவு குறைவடைகின்ற சந்தர்ப்பங்கள் பல காணக்கூடியனவாக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, முடிந்தால், ஒரு நாளைக்கு இரண்டு முறை யாவது குழந்தையின் ஒட்சிசன் அளவை பரிசோதிப்பது சிறந்தது.

இதற்கமைய குழந்தையின் சிறிய செயற்பாடொன்றின் பின்னர் குழந்தையின் உடலில் ஒட்சிசன் அளவு 94 வீதத்துக்கும் குறைவாக இருந்தால், அல்லது ஓய்வில் இருக்கும் போது குழந்தையின் ஒட்சிசன் அளவு 96 வீதத்துக்கும் குறைவாக இருந்தால் உடனடியாக குழந்தையை வைத்தியசாலையில் சேர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கொரோனாத் தொற்றுக்குள்ளான குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டாலும், தீவிர சிகிச்சைப் பிரிவில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு, வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுகின்ற நோயுற்ற குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கான காரணம், அவர்கள் வீட்டில் வைத்து சிகிச்சையளிக்கும் திட்டத்தின் கீழ் கண்காணிக்கப்படுகின்றமை ஆகும் என்றும் விசேட வைத்தியர் நளின் கிதுல்வத்த சுட்டிக்காட்டினார். கொரோனாத் தொற்றுள்ள குழந்தைகளை வீடுகளில் வைத்து கண்காணிக்கும் திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமைந்திருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், 12 முதல் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தற்போது வழங்கக் கூடியதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொடர்னா மற்றும் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறும் முறைக்கு அமைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்று வைத்தியர் நளின் கிதுல்வத்த கூறினார்.

இது தொடர்பாக குழந்தைகள் நல மருத்துவர்கள் சங்கம் விவாதித்து வருவதாகவும், அந்த வயதினருக்குள் பல்வேறு சிக்கல்கள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ள குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பயணக்கட்டுப்பாடுகளை கடுமையாக்காமல் கொவிட் பரவலை கட்டுப்படுத்த முடியாது

## பேராசிரியர் மனோஜ் வீரசிங்க தெரிவிப்பு



கொவிட்டை கட்டுப்படுத்த நாட்டை முடக்குவதற்கு எடுத்திருக்கும் தீர்மானத்தை வெற்றிகரமானதாக மாற்றிக்கொள்வதாக இருந்தால் பயணக்கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டும்.

அத்துடன் இந்த காலப்பகுதியில் கொவிட் நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ளவேண்டும். சரியான நேரத்துக்கு முறையான தீர்மானம் எடுக்காவிட்டால் எடுக்கப்படும் தீர்மானங்கள் பயனற்றுப்போகும் என கொழும்பு பல்கலைக்கழக வைத்திய பீட பேராசிரியர் மனோஜ் வீரசிங்க தெரிவித்தார்.

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் தீர்மானங்கள் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட 4.1 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்களுடன் இருவர் கைது



இந்தியாவிலிருந்து படகு ஒன்றில் யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்ட சுமார் 4.1 கோடி ரூபா பெறுமதியான 139 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று (வியாழக்கிழமை) காலை 6 மணிக்கு இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றை சோதனையிட முயன்றபோது, சந்தேக நபர்கள் கஞ்சா போதைப்பொருள் பொதிகளை கடலில் வீசியுள்ளனர்.

இருந்த போதிலும் விரைந்து செயற்பட்ட கடற்படையினர் கடலில் வீசப்பட்ட கஞ்சா போதைப்பொருள்களை மீட்டனர்.

அதனையடுத்து படகில் இருந்த இருவரையும் கைது செய்த கடற்படையினர், அவர்களை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருள் மற்றும் படகையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## செயலும் விளைவும்

**இலங்கையின் அரசியலில் மதத் தலைவர்கள் பலர் – குறிப்பாக பௌத்த பீடத் தலைவர்கள் – தீர்க்கமான ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கின்றார்கள். அந்த வகையில் அண்மைக் காலத்தில் அதிகம் பேசப்பட்டு வருபவர் கொழும்பு, நாரஹேன்பிட்டிய அபயராம விகாரையின் விகாராதிபதி வண. முருத்தெட்டுவே ஆனந்ததேரர்.**

**2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகி, நல்லாட்சி அரசு பதவியேற்று, ராஜபக்ஷக்களின் கொட்டம் முற்றாக அடக்கப்பட்டு விட்டதாக கருதப்பட்டபோது, ராஜபக்ஷக்களுக்காக முதலில் துணிச்சலுடன் குரல் எழுப்பியவர் அவர்.**

**அது மாத்திரமல்ல, சாதாரண பிரஜையாகிவிட்ட மஹிந்த கொழும்பில் அரசியல் நடத்துவதற்குத் தனது விஹாரையில் இடமளித்து, அவருக்குத் துணிச்சலுடன் பக்கத் துணையாக நின்றவர் முருத்தெட்டுவே ஆனந்ததேரர்.**

**2019இல் மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்த அவர், இப்போது இந்த ஆட்சி மாற்றத்தினால் உரிய பயன்கிடைக்கவில்லை என்று கடுமையாக விமர்சனம் செய்யப் புறப்பட்டிருக்கின்றார்.**

**கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் போது அவரது 'நாட்டைப் பாதுகாக்கும் மக்கள் குரல்' அமைப்பு ராஜபக்ஷக்களுக்காகக் கடுமையாக உழைத்தது.**

***"நாட்டைப் பாதுகாத்து, நாடு முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் எனக் கருதித் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கினோம். ஆனால் நாடு முன்னேற்றமடைய வேண்டும் என்பதற்காக அந்த அரசுக்கு வழங்கப்பட்ட ஆதரவு முழுத்தோல்வியடைந்துள்ளது. எமது எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை."* – என்று விசனம் தெரிவித்திருக்கின்றார் முருத்தெட்டுவே தேரர்.**

**அதையும் தாண்டி, *"நாட்டைப் பாதுகாக்கும் மக்கள் குரல் என்ற எமது அமைப்பு ஊடாகப் புதிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றோம்"* – என்றும் அவர் அறிவித்திருக்கின்றார்.**

***"அதற்கான நடவடிக்கைகள் தற்போது மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தாக்கம் தீவிரமடைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அபிவிருத்திப் பணிகளை இடைநிறுத்தி, நாட்டு மக்களைப் பாதுகாக்கும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள் என ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்கினோம். எங்கள் ஆலோசனைகளை ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ளவில்லை.***

***"அமைச்சர்கள் குறைந்தளவு பேசி நிறைந்தளவு செயலாற்றவேண்டும். ஆனால் ஆளும்தரப்பில் உள்ள பெரும்பாலானோர் ஊடகப் பிரசாரத்துக்காகத் தேவையற்ற வகையில் கருத்துரைக்கின்றார்கள்."* – என்றெல்லாம் அவர் சீறியிருக்கின்றார்.**

**நல்லது. 2019இல் தாங்கள் ஏற்படுத்திய ஆட்சி மாற்றம் உரிய பலனைத் தரவில்லை. அதனால் மீண்டும் ஓர் ஆட்சி மாற்றம் என்பது அவரின் திட்டமாக இருக்கின்றது. மீண்டும் ஓர் ஆட்சி மாற்றத்துக்கு முயற்சிக்கும் அவரிடம் ஒரு விண்ணப்பம்.**

**சரியான செயலைப் பிழையான வழியில் செய்தாலும் அது தவறுதான். செயலும் விளைவும் பற்றிய பௌத்த போதனைகளும் கூட அவருக்கு அதைத்தான் எடுத்தியம்பும் என்று நம்புகின்றோம்.**

**2015இல் அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சியை அடியோடு வீட்டுக்கு அனுப்பக் கால்கோளாக இருந்தவர்களுள் அவர் முக்கியமானவர்.**

**அந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கு அவர் உட்பட்ட அத்தரப்பினர் கையிலெடுத்த அரசியல் பிரசாரம் யாது? பௌத்த, சிங்களப் பேரினவாத வெறி என்ற இனவாதம்தான். எப்படியாயினும் அதிகாரத்தில் இருப்போரை வீட்டுக்கு அனுப்பி, ஆட்சியைக் கைப்பற்றச் செய்ய வேண்டும் என்பதற்காக ராஜபக்ஷக்கள் தரப்பு முன்னெடுத்த பேரினவாத வெறிப் பிரசாரத்திற்கு ஆனந்த முருத்தெட்டுவ தேரரும் துணைபோனார்.**

**அத்தகைய கொடூரப் பிழையில் கட்டி எழுப்பப்பட்ட ஆட்சி அத்தகையதாகத்தான் அமையும்.**

**செயல்களும் விளைவுகளும் பற்றிய புத்தரின் போதனைகளை ஐயந்திரிபறக் கற்ற அவருக்கு இது விளங்காமல் போனது விந்தைதான்...!**

# சுயகட்டுப்பாடுகளை அனைவரும் பின்பற்றி செயற்படுதல் வேண்டும்

## மட்டு. அரசாங்க அதிபர்

உறவுகள், உரிமைகள் என்பதைவிட சுய கட்டுப்பாடுகளை அரசாங்க உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பின்பற்ற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில அரசாங்க உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் அரசாங்கத்தின் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி கவனவீனமாக நடந்து கொள்கின்றனர் எனப் பொலிஸாரால் சுட்டிக்காட்டப்பட்டமைக்கு இணங்க கட்டுப்பாடுகளை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தியுள்ளோம்.

உறவுகள், உரிமைகள் என்பதைவிட சுய கட்டுப்பாடுகளை அரசாங்க உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பின்பற்றவேண்டிய தன் அவசியத்தை உணர்ந்துகொள்ளவேண்டும். இதுமிகவும்கொடூரமான அலை இலங்கை உட்பட உலக நாடுகளில் பரவிவருகின்றது.

ஆகவே, இந்த ஊரடங்குச் சட்டத்தைக் கடைப்பிடித்து சுகாதாரத் துறையினருக்கு ஒத்துழைத்து நாங்களும் சுயகட்டுப்பாட்டுடன் வாழ்ந்தால்தான் நாங்கள் இந்த தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து வைத்தியசாலைகள் ஊடாக எந்தவேளையிலும் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. - எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்திய தயாரிப்பிலான நடமாடும் ஒட்சிசன் தொகுதியை இலங்கைக்கு வழங்குவதற்கு அவதானம் செலுத்துக!

## இந்திய உயர் ஸ்தானிகரிடம் சுகாதார அமைச்சர் கோரிக்கை

இலங்கையில்ஏற்பட்டுள்ள ஒட்சிசன் தேவை தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறும், குறிப்பாக இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள நடமாடும் ஒட்சிசன் தொகுதியை இலங்கைக்கு வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சில் கடந்த புதன்கிழமை சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள நடமாடும் ஒட்சிசன் தொகுதி தற்போது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், ஒட்சிசன் தேவைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதால் இந்தியா இதில் அதிக கவனம் செலுத்தும் என்று நம்புகிறேன் எனவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

கொவிட் பேரழிவைத் தணிப்பதில் இரு நாடுகளும் ஒரு சவாலை எதிர்கொள்கின்றன என்றும், நட்பு நாடுகளாக இரு நாடுகளும் எதிர்கொள்ளும் சவாலான முறைகள் தொடர்பான நடைமுறை அறிவைப் பரிமாறிக் கொள்வது மிக முக்கியம் என்றும் இந்திய உயர் ஸ்தானிகர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பயணக்கட்டுப்பாடு பொருந்தாதாம்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு



நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பொருந்தாது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய, சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசிக்க முடியும் என அவர் கூறினார்.

எவ்வாறிருப்பினும் டிஜிற்றல் திட்டத்தின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்கு மாத்திரமே சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவர் என அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலாப் பயணிகள் தங்களுக்கான ஹோட்டல்களுக்கு அறிவித்து, தாம் தங்குவதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# அஜித் றோஹணவுக்குக் கொவிட் ஆனால் உடல்நிலை சாதாரணம்!

முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் குற்றவியல் மற்றும் போக்குவரத்து பிரிவின் பிரதானியும், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர்களில் ஒருவருமான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார் என அஜித் றோஹணவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும் சமூக வலைத்தளங்களில் அஜித் றோஹண கவலைக்கிடமாக சிகிச்சை பெறுகிறார் எனத் தகவல்கள் வெளியானபோதும், அதில் எந்த உண்மையும் இல்லை என அந்தத் தகவல்கள் உறுதி செய்தன.

கொவிட் தொற்றுக்கு எதிராக சிகிச்சை பெறும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹணவின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்பதை பொலிஸ் திணைக்களத்தின் உள்ளகத் தகவல்களும் உறுதி செய்தன.




அஜித் றோஹண சிகிச்சை பெறும் படம் என சமூக வலைத் தளங்களில் செய்திகள் பரப்பப்படும் நிலையில், அப் படம் போலியானது எனத் தெரியவந்துள்ளது.

டிக் டொக் சமூக வலைத்தள செயற்பாட்டாளரான வெளிநாட்டவர் ஒருவர், தான் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் போது எடுக்கப்பட்ட படங்களை சமூக வலைத் தளத்தில் வெளியிட்டுள்ள நிலையிலேயே, அதை அஜித் றோஹணவின் படம் என சிலர் பகிர்ந்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 57

ந.வித்தியாதரன்

1985 நடுப்பகுதிக்கு பின்னர் தமிழகம் செல்லும் நோக்குடன் விசா பெறுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து நான் கொழும்பு வந்த காலத்தை ஒரு தடவை பின்னோக்கிப் பார்ப்பது பொருத்தமானது.

அப்போது யாழ் குடாநாட்டில் பொலிஸ் நிலையங்கள் இருந்தன. இராணுவம் முகாம்களில் இருந்தது. வீதி ரோந்துகளில் ஈடுபட்டது. அரசின் சிவில் நிர்வாகம் நடைபெற்றது. அரசு அலுவலகங்கள் இயங்கின. எனினும் தமிழ்ப் போராளிகள் இயக்கங்கள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருந்தன. பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. வங்கிகள் கொள்ளையிடப்பட்டன. அதனால் யாழ்ப்பாண வங்கிகள் தமது பணக் கொடுக்கல் - வாங்கல் பிரிவுகளை குருநகர் இராணுவ முகாமுக்கு அருகில், பலத்த பாதுகாப்புப் பிரதேசம் என கருதப்பட்ட பகுதியில் இயக்கின. (அங்கு புகுந்தும் போராளிகள் பணத்தை கொள்ளையிட்டனர் என்பது பின்னர் அரங்கேறிய ஒரு சம்பவம்.)

பொதுமக்கள், பணக்காரர்கள், வர்த்தகர்களின் வீடுகளிலும் - ஏன் ஆலயங்களிலும் கூட - போராட்டம் மற்றும் விடுதலையின் பெயரால் கொள்ளைகள் அரங்கேறின. வாகனங்கள் ஆயுதமுனையில் கடத்தப்பட்டன. சந்திக்குச் சந்தி அப்போது மின்கம்பங்களில் ஆள்கள் கட்டப்பட்டு சுடப்பட்டு மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுக்கு பக்கத்தில் 'துரோகிகள்' என்று எழுதப்பட்ட அட்டைகளும் போடப்பட்டன. யார் விசாரணையாளர்கள், யார் நீதிபதிகள் என்று தெரியாமலேயே மரண தண்டனைத் தீர்ப்புக்கள் அரங்கேற்றப்பட்டன. இயக்க மோதல்களும் ஆங்காங்கே வெளிப்படாமல் இருக்கவில்லை.

இந்தப் பின்புலத்தில்தான் யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகை தொடங்கப் போகிறோம் என்ற பீற்றலோடு நான் சிவநாயகம் ஐயாவை போய்ச் சந்தித்தேன். என்



கனவுகளைச் செவிமடுத்த அவர் அடுத்த நாள் வரும்படி கேட்டுக் கொண்டார்.

அந்தச் சமயத்தில் பல தமிழ்ப் போராளிகள் இயக்கங்கள் உருவெடுத்து விட்டன என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவை எவை, அவற்றின் பெயர்கள், போக்குகள், தலைமைகள், செயற்பாடுகள் என்பவையும் எமக்குத் தெரிந்தோ புரிந்தோ இருக்கவில்லை.

தமிழகத்தில் தமிழ்ப் போராளிகள் எல்லோரையும் 'புலிகள்' என்று அழைத்தனர். ஆனால் புலிகள் இயக்கத்தின் மூத்த போராளிகள் பலரும் என் பள்ளித் தோழர்கள் என்பதால் எனக்கு அந்த வேறுபாடு அப்போதே தெரிந்திருந்தது.

தலைவர் பிரபாகரனின் வலதுகரமாக அந்த ஆரம்ப நாள்களில் விளங்கிய பொன்னம்மான்(குகன்), அவரின் தமையனாரான யோகி(நரேன்) எல்லோரும் எனக்குப் பாடசாலை காலத்தில் யாழ் இந்துக் கல்லூரியில் மிக நெருக்கமானவர்கள். பின்னாளில் புலிகளின் தளபதிகளான ராதா (ஹரிச்சந்திரா), மேனன்(ஈஸ்வரநாதன்). ஜனகன்(ராஜ்மோகன்) என்று அந்த அமைப்பின் மூத்த பிரமுகர்கள் பலரும் எனது பாடசாலை நண்பர்களாதலால் அவர்கள் புலிகள் இயக்கத்தில் இயங்கினார் என்பதை நான் அறிந்திருந்தேன்.

மற்ற இயக்கங்கள் பற்றி, அவற்றின் பெயர்கள் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆயினும் அவற்றை வேறுபடுத்தி அறிந்து கொள்ளவோ, கிரகித்துக் கொள்ளவோ, அவை குறித்துத் தெளிவான ஒரு



மனப் படிவம் என்னிடம் ஏற்படவோ வாய்ப்பிருக்கவில்லை.

அந்தப் பின்புலத்தில்தான் சிவநாயகம் ஐயாவை நான் கொழும்பில் சந்தித்தேன். இச்சூழலில் யாழ்ப்பாணத்தில் முதலிட்டு ஒரு பத்திரிகையை ஆரம்பிப்பதில் உள்ள நெருக்கடிகளை அவர் கோடி காட்டினார்.

*"கொழும்பில் பத்திரிகைகளில் நீங்கள் பார்த்த - எதிர்கொண்ட - நெருக்கடிகள் வேறு. எனக்குத் தெரிந்த வரை இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகையை நடத்துவது என்பது வேறு. ஒன்றுக்கு, இரண்டு தடவைகள் அது குறித்துச் சிந்தியுங்கள்"* - என்றார் அவர்.

அந்த வயதில், விளையாட்டுப் பிள்ளையான எனக்கு அந்த எச்சரிக்கையின் நீள, அகல, ஆழங்கள் புரியவில்லை. அல்லது நான் விளங்கிக் கொள்ளவில்லை. விளையாட்டுப் பிள்ளைக்கான அசட்டுத் துணிச்சலுடன் பத்திரிகை ஆரம்பிப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம் என்றேன் நான்.

அதற்குப் பின்னர்தான் யாழ்ப்பாணத்து சூழ்நிலையின் அடிப்படையில் அந்த ஆலோசனையை முன் வைத்தார் சிவநாயகம் ஐயா.

*"யாழ்ப்பாணத்தில் களத்தில் இருக்கும் இயக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாணியில் செயல்படுகின்றன. எனினும் யாழ்ப்பாணத்தில் அவற்றின் இருப்பு ஆபத்திற்குரியது. எந்நேரத்திலும் படைகள் மற்றும் பொலிஸாரின் சுற்றிவளைப்புக்கான ஆபத்து இருப்பதை அவை புரிந்து கொண்டுள்ளன. அதனால் அவை எல்லாமே தமது தலைமைத்துவங்களை தமிழகத்தில், பெரும்பாலும் சென்னையில், பேணுகின்றன என்று அறிகிறேன். முடியுமானால் உமது தமிழகப் பயணத்தின் போது சென்னையில் அவற்றின் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். முகப்பரிச்சயத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். இந்த இயக்கங்களில் பெரும்பாலும் தலை இருக்க வால் ஆடாது. ஆகவே அந்தப் பரிச்சயம் உங்களுக்கு யாழ்ப்பாணத்தில் பத்திரிகையை சிக்கலின்றி முன்னெடுக்க - வால்களை கையாள - உதவியாக இருக்கும்"* - என்ற சாரப்பட ஆலோசனை தந்தார் சிவநாயகம் ஐயா.

தினபதி அலுவலகத்தில் வைத்து இந்த ஆலோசனையை அவர் கூறிய சமயம் அவரது மேசைக்கு முன்னால் எனது பக்கத்தில், துணை ஆசிரியர் இரத்தினசிங்கமும் இருந்தார் என்று நினைவு. அவரும் பல விடயங்களைக் கூறினார்.

முப்பத்தியாறு வருடங்களுக்கு முந்திய சமாச்சாரம். எனக்கு முழுமையாக அவை நினைவில் இல்லை. ஆனாலும் சென்னையில் தமிழ்ப் போராளிகள் இயக்கத்தை சந்தித்து முகப்பரிச்சயம் செய்து கொள்ளுங்கள் என்று சிவநாயகம் ஐயா ஆலோசனை கொடுத்தமையும் அது எவ்வாறு பிற்காலத்தில் எனக்குப் பேருதவியாக அமைந்தது என்பதையும் 90களுக்கு முன்பே நான் வலிமையாக - அனுபவபூர்வமாக - அறிந்து, உணர்ந்து கொண்டேன். அதனால் அந்த ஆலோசனையும் அதன் சாதக விளைவுகளும் பசுமையாக என் மனதில் பதிந்து கொண்டன.


அந்தக் கால யாழ்ப்பாணம்

தமிழகம் செல்லும் போது மதுரையை ஒட்டிய திருமங்கலம் கிராமத்தில் மருத்துவராகப் பணிபுரியும் தனது மருமகன் டாக்டர் அருள் ராமலிங்கத்தையும், தமது மகள் சித்ராவையும் நேரில் போய் பார்க்கும்படியும் சிவநாயகம் ஐயா கூறினார்.

அப்போது எனக்கு இளமை கூவும் இருபத்தியாறு வயது. சென்னைப் பயணம் என்பது பல கனவுகள் எதிர்பார்ப்புகளுடனான எண்ணங்களைத் தரக்கூடியது. அச்சமயத்தில் மதுரைக்குப் போய் திருமங்கலம் போகச் சொல்கிறாரே, சென்னையில் தமிழ் இயக்கங்களைத் தேடிப்பிடித்துச் சந்திக்கக் கூறுகின்றாரே, எனது குறுகிய கால தமிழகப் பயண நேரம் இவற்றில் வீணாகி விடுமோ என்று எரிச்சல் பட்டேன் நான்.

அத்தோடு இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

*"அமிர்தலிங்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிற தலைவர்களும் கூட அங்குதான் இருக்கிறார்கள். அவர்களை உமக்கு முன்னரே நன்கு தெரியும். நிச்சயம் அந்த தொடர்புகள் உங்கள் புதிய பத்திரிகைக்கு உதவும். ஆனால் அது பத்திரிகை இயங்கத் தொடங்கிய பிறகு. இப்போது அந்தத் தொடர்புகளால் பயன் இல்லை. அதனால் இச்சமயத்தில் அவர்களைத் தேடிப் போய் நேரத்தை வீணடிக்க வேண்டாம். விரும்பினால் சென்னையில் இருக்கும் போது தொலைபேசியில் அவர்களுடன் பேசி உமது ஊடாட்டத்தை புதுப்பித்துக் கொள்ளுங்கள்."* - என்றும் கூட அவர் 'அட்வைஸ்' தந்தார்.

அன்றைய நிலையில் அதனை ஒரு நடுநிலைக் கண்ணோட்டத்துடனான ஆலோசனையாக நான் பார்க்கவில்லை என்பதையும், தன் விருப்பு - வெறுப்புக்கு ஏற்ப ஐயா அப்படிக் கூறுகின்றார் என்று நான் கருதினேன் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால், ஐயாவின் வழிகாட்டல்தான் உதயன் தொடங்கிய வருடங்களில் பல பிரச்சினைகளை மிதப்போடு நான் கையாளும் வலிமையை எனக்குத் தந்தன என்பதை உறுதியோடு கூறுவேன். அவற்றைப் பற்றிய விவரங்களையும் என் தமிழக அனுபவத்தின் சுருக்கத்தையும் நாளை பார்ப்போம் நண்பர்களே.

(வளரும்...)




காலைக்கதிர் Kalaikkathir


# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 17

## பரப்பளவு





ஒரு பக்க நீளம் 1cm ஆகவுள்ள சதுரம் ஒன்றின் பரப்பளவு $1cm^2$ ஆகும்.



சிறிய சதுரத்தின் பரப்பளவு $1cm^2$ எனின் உருவின் பரப்பளவு $17cm^2$ ஆகும்.


01) பின்வரும் உருக்களில் ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு $1cm^2$ எனின் கீழ் வரும் உருக்களின் பரப்பளவினை அட்டவணையினுள் எழுதுக.




| உரு | பரப்பளவு |
|---|---|
| a | |
| b | |
| c | |
| d | |
| e | |


* சதுரம் ஒன்றின் பரப்பளவு

சதுரத்தின் பரப்பளவு = நீளம் X அகலம்
= a x a
= $a^2$ சதுர அலகுகள்





* செவ்வகம் ஒன்றின் பரப்பளவு

செவ்வகத்தின் பரப்பளவு = நீளம் X அகலம்
= a x b
= ab சதுர அலகுகள்





02) கீழ்வரும் தளவுருக்களின் பரப்பளவைக் காண்க





| உரு | பரப்பளவு |
|---|---|
| a | $8cm \times 5cm = 40cm^2$ |
| b | |
| c | |
| d | |
| e | |
| f | |

03.




செவ்வகத்தின் பரப்பளவு = ..................
சதுரத்தின் பரப்பளவு = .....................
நிழற்றிய பகுதியின் பரப்பளவு = செவ்வகத்தின் பரப்பளவு - சதுரத்தின் பரப்பளவு
= .................... - .................
= ..............


04) கூட்டுத்தளவுருக்களின் பரப்பளவு காணல்
உதாரணம் i)




உரு 1 இன் பரப்பள
$=16cm^2$

உரு 2 இன் பரப்பளவு = 3cm x 2cm
$= 6cm^2$

∴ முழுவுருவின் பரப்பளவு $= 16cm^2 + 6cm^2$
$= 22cm^2$




ஆக்கம் : திரு. பா.லாவண்யா
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றிலிருந்த சிசு கொடிய கொரோனாவால் பரிதாபச் சாவு!



கொரோனாவைரஸ்தொற்றுக் காரணமாக கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் இருந்த ஐந்து மாத சிசு கொரோனா வைரஸ் தொற்றுக்காரணமாகஉயிரிழந்துள்ளது.

கம்பளை வைத்தியசாலையின் சுகாதாரப் பிரிவு இதனை அறிவித்துள்ளது.

கம்பளையைச்சேர்ந்த குறித்த பெண், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு, கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இதன்போது, கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் இருந்த சிசு உயிரிழந்துள்ளது.

இதன் காரணமாக சத்திரசிகிச்சை மூலம் சிசு அகற்றப்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# பொருள்களின் விலை அதிகரிப்பால் நாட்டில் பண வீக்கம் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 27

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றத்தால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2021 ஜுன் மாதம் 6.1 சதவீதமாக இருந்த பணவீக்கம் ஜுலையில் 6.8 சதவீதத்துக்கு அதிகரித்துள்ளது.

உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருள்களின் விலைகளின் மாதாந்த அதிகரிப்பால் இந்தப் பணவீக்கம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கமைய, உணவுப் பணவீக்கம் ஜுன் மாதமிருந்த 9.8 சதவீதத்திலிருந்து ஜுலையில் 11.0 சதவீதத்திற்கும் உணவல்லாப் பணவீக்கம் 2.9 சதவீதத்திலிருந்து ஜுலையில் 3.2 சதவீதத்துக்கும் அதிகரித்துள்ளது.

ஆண்டுச் சராசரியின் அடிப்படையில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் 2021 ஜுலையில் 5.4 சதவீதமாக எவ்வித மாற்றமின்றிக் காணப்பட்டது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2021 ஜுலையில் 0.63 சதவீதத்தைப் பதிவுசெய்தது.

இதற்கு, உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருள்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தன.

மேலும், உணவு மற்றும் உணவல்லா வகைகளின் மாதாந்த மாற்றங்கள், முறையே 0.37 சதவீதத்தையும் 0.27 சதவீதத்தையும் பதிவுசெய்தன.

அதற்கமைய, உணவு வகையினுள் சீனி, காய்கறிகள், கருவாடு மற்றும் உடன் மீன் என்பவற்றின் விலைகள் அதிகரித்த அதேவேளை தேய்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் விலைகள் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

மேலும், உணவல்லா வகையினுள் பிரதானமாக போக்குவரத்து (பெற்றோல் மற்றும் டீசல்) மற்றும் உணவகம் அத்துடன் விடுதிகள் துணை வகைகளில் மாத காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அதிகரிப்பொன்று பதிவாகியது.

மேலும், ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கம், 2021 ஜுனின் 4.1 சதவீதத்திலிருந்து ஜுலையில் 4.4 சதவீதத்துக்கு அதிகரித்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் இந்த ஆண்டு ஜுலையில் 4.4 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

## மனித நுகர்வுக்கு தகுதியற்ற சீனியை வைத்திருந்த இருவர் மாட்டினார்கள்

மனித நுகர்வுக்குத் தகுதியற்ற சீனியை வைத்திருந்த இருவரை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மேல் மாகாண புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டையிலிருந்து கல்முனைக்கு கொண்டு செல்லப்பட்ட சீனித் தொகையே கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது மனித நுகர்வுக்குத் தகுதியற்ற சுமார் 200 சாக்கு சீனி பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்காதோர் முறையிடலாம்!

*அரசாங்கத்தால் வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்காதவர்கள் அது தொடர்பாகப் பிரதேச செயலாளர்களிடம் முறையிட முடியும்.*

*நாடு முழுவதும் பல பகுதிகளில் குறித்த 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதாக பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.*

*இந்நிலையில் குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்ட இடங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பவர்கள் அது தொடர்பில் பிரதேச செயலாளர்களிடம் முறையிட முடியும் என அந்த செயலணி அறிவித்துள்ளது.*

*இதேவேளை 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவை உடனடியாக மற்ற பகுதிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.*

## நயினாதீவில் மரணச் சடங்கில் கலந்த மூவருக்குத் தொற்று

நயினாதீவில் மரணச் சடங்கில் கலந்துகொண்ட மூவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதியாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நயினாதீவில் வசிக்கும் வயோதிபப் பெண்மணியொருவர் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

அவரது மரணச் சடங்கில் ஊரவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அந்நிலையில் ஓரிரு நாள்களில் உயிரிழந்தவரின் சகோதரி உள்ளிட்ட சிலருக்கு திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து அவர்கள் வைத்தியசாலைக்கு சென்றபோது, அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மூவருக்கு தொற்று உள்ளமை உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## படகு கவிழ்ந்தமையால் கடலில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நஷ்டஈடு



அண்மையில் சூறாவளித் தாக்கம் ஏற்பட்டு இரண்டு தினங்களில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று படகு கவிழ்ந்ததால் கடலில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த மூவருள் ஒருவரான எதிர்வீர ஜயசூரிய ஆருகட்டு பட்ட பந்திகே ஜானக என்னும் 45 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு படகு கவிழ்ந்ததால் கடலில் மூழ்கி உயிரிழந்தவராவார்.

இதனால் பாதிக்கப்பட்ட அவரது குடும்பத்தினருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 10 லட்சம் ரூபா நஷ்டஈடு நேற்று அவரது குடும்பத்தினரிடம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான கபில நுவன் அத்துக்கோராளவினால் மாவட்ட செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இதில் மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள, திருகோணமலை மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் டபிள்யு. ஏ.ஆர்.சேனாரத்ன உட்படப் பயனாளிக் குடும்பத்தினரும் கலந்து கொண்டிருந்தனர்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 16

### நீளம் - விடைகள்

01.
iii - 3.25m
iv - 7.075km
v - 53mm
vi - 1.5m
vii - 2560m

02.
iv - 12m 55cm
v - 28m 50cm
vi - 4km 970m
vii - 2m 10cm
viii - 34cm 5mm

03.
iv - 3m 73cm
v - 4m 70cm
vi - 3km 350m
vii - 24cm 8mm
viii - 8km 890m

04.
iv - 81m 20cm
v - 12m 24cm
vi - 109cm 8mm
vii - 117km 200m
viii - 51cm 2mm

05.
ii 8km 440m = 8440m
8440m ÷ 5 =1688m
1km 688m
iii - 65cm 7mm = 657mm
657mm ÷ 9 = 73mm
7cm 3mm

**ஆக்கம் : திரு. பா.லாவண்யா**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்**
**விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

## கொரோனாத் தொற்று குணமடைந்தோர் 3 லட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்தது

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த மேலும் 2 ஆயிரத்து 139 பேர் பூரண குணமடைந்து நேற்று (வியாழக்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 51 ஆயிரத்து 69 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரையில் 4 லட்சத்து 7 ஆயிரத்து 768 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம், கொரோனாத் தொற்றால் இதுவரையில், 7 ஆயிரத்து 948 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கில் வெளியில் நடமாடுபவர்களுக்கு வவுனியாவில் அன்டிஜன் பரிசோதனைகள்

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் வவுனியா நகரில் வெளியில் நடமாடுபவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக வவுனியா நகரின் முக்கிய பகுதிகளான சதொச வீதி மற்றும் ஏ9 வீதி போன்ற பல்வேறு பகுதிகளில் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்களால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது

இதனையடுத்து குறித்த 12 பேரையும் தனிமைப்படுத்தல் மையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் 10 லட்சம் கோப்புகள் மாயம்; விசாரணைகள் அதி தீவிரம்

கொழும்பு, ஒக.27

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுத்தளத்திலிருந்து சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட கோப்புகள் காணாமல்போயுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கோப்புகள் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், உள்நாட்டு மருந்து விநியோகமுகவர்களின் விவரம், மருந்து வகைகளின் பதிவுகள் என்பன தொடர்பான ஆவணங்கள் அடங்கிய கோப்புளும் உள்ளடங்குகின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 112

**320. போர்ச்சூழலில் இருந்து வெளியேறிய மக்கள் தெரிவித்த வகையில் எது நம்பகத்தன்மையாக இருந்தது?**

மக்கள் தாம் பசி, பட்டினியால் தவித்ததையும், காயப்பட்டவர்களுக்கு மருந்தே இல்லாமல் இறந்ததையும் அதன் பற்றாக்குறையையும், இருந்த சில மருத்துவர்களும், வண பிதாக்கள் இரவு பகல் பாராமல் தங்களுக்காக பாடுபட்டதையும் உணர்வுபூர்வமாகச் சொன்னார்கள். வண. பிதா ஜேம்ஸ் பத்திநாதனை நான் அந்நியோனியமாக அறிவேன். அவருக்கு மக்களில் இருந்த கரிசனையும், அவரைப் பற்றி சர்வதேச அரசசார்பற்ற நிதி நிறுவனங்கள் அறிந்திருந்ததும் அவர்மேல் கொண்டிருந்த மதிப்பும் அவரோடு இயங்கிய எல்லோரும் அறிந்திருந்தவை. அவர் விடுதலைப் புலிகளுக்கு முகவராக, உண்மைக்குப் புறம்பாக, மக்கள் படும் அவதியை அந்த மகஜரில் எழுதித் தெரிவித்தார் என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், போர் முடிந்து அவரை நான் சந்தித்தபோது, இவை பற்றிப் பேசினேன். அவர் போர்வலயத்தில் இருந்த உண்மை நிலைமைகளை, உணவு, மருந்து என்பவற்றின் பற்றாக்குறை, அவை அனுப்பப்படாதமை, சிறு தொகை அனுப்பப்பட்டாலும் மக்களுக்கு வந்தடையாமை பற்றி எல்லாம் விவரித்தார். சிறு பிரதேசத்தில் இருந்த மக்களின் தொகைகளைப் பகுதி, பகுதியாகத் தெரிவித்தார். அவருக்கு மக்களின் பால் இருந்த அர்ப்பணிப்பாலும், நடுநிலைமையாலும், விடுதலைக்குச் செய்த அர்ப்பணிப்புக்காகவும் பெற்ற பரிசு எமது விடுதலைப் போராட்டத்தையே, யாருக்காக எதற்காக என்று தெரியாமல் கேள்விக்குறியாக்கியதுதான் என்றார். போரின் கடைசி நாள்களில், படைகளின் உன்மத்த தாக்குதல்களால் வாழ்விடங்களையும் இழந்து, பிரதேசம் சுருங்கி, மக்கள் மேலும் மேலும் பின்வாங்க, விடுதலைப் புலிகளும் போராட்டத்தை எது வழியிலும், இந்தியத் தேர்தல் முடிவு வரை இழுக்க வேண்டும் என்று வியூகங்கள் போட்டு அதற்காக போருக்குப் பயிற்றப்படாத இளைஞர்களையும் யுவதிகளையும், முள்ளிவாய்க்கால் பகுதிகளிலும் ஆள்சேர்ப்பு செய்தார்கள், அந்த நிலை எழுந்ததும் அவரும் மற்ற வண பிதாக்களும், மருத்துவர்கள், பொதுமக்களுடன் புலித்தேவன், நடேசன் போன்ற தளபதிகளைச் சந்தித்து போரை இனியும் தாக்குப்பிடிப்பது கஷ்டம், மக்களாலும் அவற்றை மேலும் சகித்துக்கொள்ளக் கூடிய மனோதிடம் காணப்படவில்லை, பற்றாக்குறைகளும், ஈடுசெய்ய முடியாமல் இருப்பதால், போரை நிறுத்தி, மக்களை வெளியேற உதவி செய்யும்படி கேட்டார்கள். அதற்கு அவர்கள் போர் நிறுத்தத் தகவல்கள் வரவில்லை, முடியுமட்டும் தாங்கள் போராட வேண்டும், அப்படியான செய்திகளை தருவது, பலவீனத்தைக் காட்டும் என்றும் ஆள்சேர்ப்புக்கு நீங்கள் ஆதரவாக இல்லை என அறிகிறோம், அப்படியில்லாமல் ஆதரவு தாருங்கள், இது எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டிய கடைசிக்கால கட்டங்களில் இருப்பது எனச் சொல்லப்பட்டது.

அடுத்தடுத்த நாள்களில், ஆள்சேர்ப்பு வலுப்படுத்தப்பட தங்கள் பிள்ளைகளை அனுப்ப விரும்பாத பெற்றோர்கள் அவர்களை வண பிதாக்களின் வலைஞர்மட கோவிலின் குடியிருப்பில் விட்டுவிட்டு 'இவர்களை உங்களிடம் கையளித்து விட்டோம், அவர்களைக் காப்பாற்றுங்கள்' என்று சொல்லிப் போய்விட்டார்கள். இரண்டு, மூன்று நாள்கள் தொடர்ச்சியாக ஆள்சேர்ப்புக்கு வந்த விடுதலைப் புலிகளுடன் வாக்குவாதப்பட்டு, இளைஞர்களைக் கூட்டிச் செல்ல முடியாது எனத் தடுக்கப்பட்டது. அடுத்த நாள் காலை, எனக்கு நேரடியாக அவர் சொன்னதிலும், பின் எழுதியதின் படியும் அவர்களின் வலைஞர்மட இருப்பிடம் விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கும் அவரை குறி பார்த்தும் நடத்தப்பட்டது. ஒரு வண.பிதா இறந்தார். இவர் காயப்பட்டு உடனடியாக போர் வலயப் பகுதிக்கு அப்பாலிருந்த மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதால் உயிர்தப்பினார்.





பின்னர் அந்த இளைஞர்கள் விடுதலைப் புலிகளால் கொண்டு செல்லப்பட்டனர் என அவர் வருந்தினார்.

பிரபாகரன் முதல் எல்லா மூத்த தளபதிகள், போராளிகள் வரை அபரிமித பாசமும் மதிப்பும் வைக்கப்பட்டவர். ஆனால் கடைசி நாள்களில் கட்டுப்பாடு இன்றி நடந்த அசம்பாவிதங்கள் என்றே அதனைக் கணித்தார். எல்லா விடுதலை வீரர்களுக்கும் இறந்தோர்களுக்கும் திருப்பலியில் நிறைவு கூர்வதை அவர் மறக்கவில்லை.

அந்த வணக்கத்துக்குரியவர் மறைந்தபோது முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள் கண்ணீர் சிந்தின. யாழ்ப்பாணத்தில் வரலாறு காணாதளவில் வடக்கு, கிழக்கு, மன்னார் ஆயர்களும் எத்தனையோ பங்குக் குருக்களும் திருப்பலி கொடுக்க, கதறியழுது மக்களும் சொந்தமும் வழியனுப்பினர். முல்லைத்தீவு மக்கள் தங்களது பங்குதந்தைக்காகச் சிலையெழுப்பினார்கள்.

அவரை அரசாங்கத்துக்காக கலாநிதி ராஜீவ் விஜயசிங்கா அவரை எந்தக் கத்தோலிக்கத் திருச்சபை மாவட்டமும் அறிந்து கொள்ளாத விடுதலைப் புலிகளின் முகவர் என எழுதினார்.

பின்னாளில் போர் முடிந்து ஒரு நல்லிணக்கத் தூதுவராக அவர் வண.பிதா ஜேம்ஸ் பத்திநாதன் மேற்பார்வை செய்த மாங்குளம் இளைஞர் பணிமனைக்கும் சென்று அவரை சந்தித்தார். பின்னர் தனது நல்லிணங்களின் பயணங்கள் என்ற குறிப்புகளில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"தமிழ் கார்டியன் பத்திரிகை அவர் இராணுவத் தாக்குதலில் 2009இல் காயப்பட்டாரென்றும் இந்த காயங்களினால் இறந்தார் என்றும் குறிப்பிட்டது. ஆனால் உண்மையில் விடுதலைப் புலிகளே அவரை கொல்வதற்கு ஏவுகணைத் தாக்குதலை நடத்தினார்கள். அவர் தனது மக்களுக்காகவும் இராணுவங்களின் தேவைக்கு மேலான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் துணிவாக நின்றவர்.

நான் அவரை சந்தித்து, அவரது வாழ்க்கையை தெரிந்து கொண்டபின் எனது புத்தகன் ஒன்றை அவரது பெயரில் அர்ப்பணித்தேன். அவர் இரண்டு பகுதிகளுக்கும் இடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்தப் பாடுபட்டு அதற்காக ஒரு விலையையும் கொடுத்தார்." – இந்த உண்மைகளும் ஞானங்களும் காலம் கடந்து தான் வந்தன.

**321. இவற்றை சர்வதேசம் அறிந்து கொள்ளவில்லையா?**

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, போர் வலயத்தில் இருந்த ஐ.நா. பிரதிநிதிகள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் போன்ற தரப்புகள் மக்கள் வாழ்வதற்குத் தேவையான அத்தியாவசிய உணவு, மருந்து என்பவை வழங்கப்படாதமை பற்றி அங்கலாய்த்தார்கள். இவை மக்களின் பாரிய மனித உரிமை மீறல்களாக – மனிதாபிமானத்திற்கு எதிரான செயல்களாக – கருதப்பட்டு ஐ.நா. பாதுகாப்பு சபை மட்டத்தில் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என கோரிக்கைகள் விடப்பட்டன. ஆனால் சர்வதேசத்தின் அங்கத்துவ நாடுகளின் ஆதரவுகள் இல்லாததால் அந்தக் கோரிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ஐ.நா. மட்டத்தில் அது மேற்கொள்ளப்படுவது குறித்துச் அமெரிக்காவினாலும் இந்தியாவினாலும் கூட, அக்கறை காட்டப்படவில்லை.

இந்தியாவின் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் சிலரும் தமிழ்நாட்டுக் கட்சிகள் எழுப்பிய கோஷங்களுக்கும் நாடாளுமன்றத்தில் வெளிவிவகார மந்திரி பிரணாப் முகர்ஜி தந்த தகவல்களாலும் பதில்களாலும் அப்படியான அங்கலாய்புகளில் எதுவித நியாயங்களும் இல்லை, இவை பயங்கரவாதிகளின் பிரச்சாரத்துக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறப்பட்டது. தங்களது ஸ்ரீலங்காத் தூதரகத்தினர், போர்வலயம், பாதுகாப்பு வலயங்கள் என்பவற்றில் தகவல்களுக்காக நேரடியாக இணைந்துள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டது.அரசாங்கத்துக்காக கலாநிதி ராஜீவ் விஜயசிங்க நெறிப்படுத்திய கணக்குகளின் அடிப்படையிலும், பராமரிப்பு முகாம்களில் உள்ள மக்கள் தொகையும் கணக்கெடுத்து தேவையான அத்தியாவசியப் பொருள்கள் போர்வலயத்திற்கு அனுப்பப்படுவதாகவும் கூட நியாயப்படுத்தினார்கள்.

இந்தியா சர்வதேசத்துக்கு தந்த , இந்த நியாயப் படுத்தலின் உதவியோடு ஸ்ரீலங்கா மக்களை வெளியேற்றி விடுதலைப் புலிகளுக்கு பொறிவைக்க பட்டினியையும் வருத்தங்களையும் மக்களுக்கு எதிராக எந்தவிதமான அவமானங்களையும் கணக்கெடுக்காமல் நடத்திக் கொண்டிருந்தனர். போதாதகாலம் என்பதும் சனிதோஷத்தின் போக்கு என்பது இதுதானோ தெரியவில்லை.

1986 ஜே.ஆர். இதுபோன்ற ஒரு தடையை யாழ்ப்பாணத்துக்கு ஏற்படுத்த, வெகுண்டெழுந்த இந்தியா, ஸ்ரீலங்காவின் வான்வரப்பையும் மீறி உணவுப் பொட்டலங்களையும் அத்தியாவசியத் தேவைகளையும் மக்களுக்கு தந்தது.

இன்றோ மக்கள் வெளியேறவும் வழியின்றி, சிவ பகுதிக்குள் முடக்கப்பட்டு, எதுவும் விளைத்தெடுத்து உண்ணவும் முடியாது, வானத்தை பார்த்து எமது உடன் பிறப்பான இந்தியா ஏதாவது முன்னரைப் போல தராதா என்று ஏங்க, இங்கு பிரணாப் முகர்ஜி ஸ்ரீலங்கா செய்யும் பத்துமடங்கு கொடுமைகளையும், அட்டூழியங்களையும், மக்களை கணக்கிலேடுக்காது நியாயப்படுத்துகிறார்.

பயங்கரவாதத்தை அழித்த பிறகு, சர்வகட்சி தரும் அதிகாரப்பரவலை அரசியல் தீர்வாக, 13ஆம் திருத்தத்தின் மேலேயும் தருவேன் என்று பறைசாற்றிய மஹிந்தா, பின்னர் இந்தியாவுக்கு பரமசிவம் கழுத்திலிருந்த பாம்பு கேட்ட மாதிரி சுகமா? என்று கேட்டார்.

கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல், சீனாவை சமாளிக்க, சுண்டெலியுடன் பூனை சமரசம் பேசுகிறது. ஒரு பேனா தான் எழுதியதைத் திருத்த முடியாது. அதனைப் புதிதாக எழுதவேண்டும். ஆனால் பென்சில் அப்படியல்ல. அதற்கு 'ஈரேசர்'நண்பராக இருந்து திருத்தி மீள எழுத உதவிசெய்யும்.

ஆதலால் இந்தியா இங்குதன் நண்பனை அறிந்து கொள்ளவேண்டும். போர்வலயத்தில் பரிதவித்து ஏங்கி ஏங்கி இறந்தவர்களுக்கு இந்தியா செய்ததில் அவர்கள் வருந்தி இட்ட சாபமோ எதுவோ தன் வினையில் சிங்களத்தை சீனாவிற்கு தாரைவார்த்துக் கொடுத்து, அந்த வினையால் தன்னையும் சுட்டு ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்ற மாதிரி ஆப்கானிஸ்தானையும் சீனா ஏப்பம் விடப் பார்த்து நிற்கின்றது இந்தியா.

(வளரும்......)

# தேசிய அனர்த்த நிலையை நாடு எதிர்கொண்டுள்ளது!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



நாடு தேசிய அனர்த்த நிலையை எதிர்கொண்டுள்ளது. ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் கொவிட் - 19 தடுப்பூசியை பெற்றுக் கொண்டு சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்ற வேண்டும்.

சுகாதார ஆலோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கினால் கொவிட் தாக்கத்தை சிறந்த முறையில் வெற்றிக் கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளலர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# அதிக விலைக்கு அரிசியை விற்கும் வியாபாரிகள் மீது சட்டநடவடிக்கை

## பந்துல குணவர்தன திட்டவட்டம்



நிர்ணய விலைக்கு மாறாக அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் சட்டவிரோதமான முறையில் 6 களஞ்சியசாலைகளில் பதுக்கி வைத்திருந்த சுமார் 40 லட்சம் மெற்றிக்தொன் நெல் கைப்பற்றப்பட்டுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அத்தோடு, நிர்ணய விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இருப்பினும் சதொச விற்பனை நிலையத்தின் ஊடாக அத்தியாவசியப் பொருள்கள் குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அரிசியின் விற்பனை விலை சர்ச்சைக்குரியதாகக் காணப்படுகிறது.

அரிசியின் நிர்ணய விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்வதற்காக 6 களஞ்சியசாலைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 40 லட்சம் மெற்றிக் தொன் நெல் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கொவிட் தாக்கத்துக்கு மத்தியில் அத்தியாவசியப் பொருள்கள் நிர்ணய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கட்டணமில்லாமல் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன. - என்றார்.

# இரு தடுப்பூசியும் பெற்ற நடமாடும் வியாபாரிகளுக்கு மாத்திரமே கொழும்பில் வியாபாரத்துக்கு அனுமதி

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் சந்தர்ப்பத்தில் கொழும்பு மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசி இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்ட வியாபாரிகளுக்கு மாத்திரமே நடமாடும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படும்.

தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத யாரும் இந்த வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின் போது கொழும்பு மாவட்டத்தில் பொது மக்கள் நலநோம்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக விளக்குகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.



## வைத்தியரை மிரட்டியமை;

# சிறைச்சாலைகள் நீதிமன்றில் ரிஷாத்தை விசாரிக்க திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், மகசின் சிறைச்சாலையில் வைத்தியர் ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுத்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை நீதிமன்றில் விசாரணை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட சிறைச்சாலைகள் உதவி அத்தியட்சகரின் பரிந்துரைக்கு அமைய, சிறைச்சாலைகள் நீதிமன்றம் ஒன்றை அமைத்து விசாரணையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, வைத்தியரை அச்சுறுத்தியமை தொடர்பான விடயத்தை சிறைச்சாலைகள் நீதிமன்றம் ஒன்றின் முன் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சிறைச்சாலைகள் நீதிமன்றம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் கீழ் ஏற்படுத்தப்படுவதுடன் அந்தக் குழு முன்னிலையில் அது தொடர்பான விசாரணைகள் நடாத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவனைத் துஷ்பிரயோகம் செய்த மட்டக்களப்பு பிக்கு

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள புன்னைக்குடா விகாரையில் பிக்குவாக படிப்பதற்காக தங்கியிருந்து வந்த 11 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த விகாரையின் பிரதம பிக்கு ஒருவரை கைது செய்துள்ளோம்என பொலிஸார் தெரிவித்தனர்.

பிற மாவட்டத்தைச் சேர்ந்த 11 வயதுடைய குறித்த சிறுவன் பிக்குவாக படிப்பதற்பாக விகாரையில் வந்து தங்கியிருந்து படித்து வந்த சிறுவனை நீண்டகாலமாக பிரதம பிக்கு பாலியல் துஷ்பிரயோகம் செய்துவந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவதினமான கடந்த புதன்கிழமை சிறுவன் பொலிஸாரிடம் சென்று முறைப்பாடு செய்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த பிக்குவை கைது செய்தமையுடன், சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன் இதில் கைது செய்த பிக்குவை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோத மதுபான வியாபாரத்தில் ஈடுபட்ட நபருக்கு அபராதம் விதிப்பு

மட்டக்களப்பு முகத்துவாரப் பகுதியில் ஊரடங்கு வேளையில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட நிலையில் கைதுசெய்யப்பட்ட ஒருவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் கடந்த புதன்கிழமை ஆஜர்படுத்தியபோது அவரை தண்டப்பணமாக 65 ஆயிரம் ரூபா செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கமைய மட்டு தலைமையக பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான கடந்த செவ்வாய்க்கிழமை முகத்துவாரம் பகுதியிலுள்ள குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது நீண்டகாலமாக சட்டவிரோதமாக அரச மதுபானங்களை வியாபாரம் செய்துவந்த ஒருவரை பெருமளவிலான மதுபானப் போத்ததல்களுடன் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம் றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை தண்டப்பணமாக 65 ஆயிரம் ரூபா செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நைரோபியில் உள்ள இலங்கை உயர் தூதரக ஊழியர்களின் ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு கொரோனா நிதிக்கு வழங்கல்

இலங்கையில் அதிகரித்து வரும் கொரோனா நிலைமையைக் கருத்தில் கொண்டு, கென்யாவின் நைரோபியில் உள்ள இலங்கை உயர் தூதரகத்தின் ஊழியர்கள் ஓகஸ்ட் மாதத்துக்கான சம்பளத்தை கொரோனா நிதிக்கு வழங்க முடிவு செய்துள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு எதிராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் எடுக்கும் கடினமான நடவடிக்கைக்கு உதவும் வகையில் குறித்த நிதியை வழங்க அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

கொரோனா நிதிக்கு ஓகஸ்ட் மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்குமாறு அனைத்து அமைச்சர்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கையை விடுத்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# விற்றமின் சி மற்றும் டீ , பெரசிட்டமோல் உள்ளிட்டவை கொவிட் வைரஸ் ஒழிப்புக்கு உபயோகிக்கப்படுகின்றன

## வைத்திய நிபுணர் பிரியதர்ஷினி கலப்பதி தெரிவிப்பு

கொவிட் வைரஸை ஒழிப்பதற்கான மருந்துகள் எவையும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற முடியும்.

எனினும் விற்றமின் சி மற்றும் டீ உள்ளிட்ட மாத்திரைகளே எமது நாட்டில் தொற்றாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. அத்தோடு தொற்றின் காரணமாக ஏற்படும் காய்ச்சல் என்பவற்றைக் குறைப்பதற்கு 'பெரசிட்டமோல்' மாத்திரை வழங்கப்படுவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஔடதங்கள் தொடர்பான பேராசிரியர் விசேட வைத்திய நிபுணர் பிரியதர்ஷினி கலப்பதி தெரிவித்தார். சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

# மேலும் இரு வாரங்கள் நாட்டை முடக்குங்கள்!



## அரசிடம் ரணில் வலியுறுத்து

**கொரோனா நோய்த் தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்த சுகாதார அறி வுறுத்தல்களின்படி நாட்டை மேலும் இரண்டு வாரங்களுக்கு மூடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

**நாளாந்தம் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக நாட்டை முடக்குவதன் மூலம் மக் களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.**

**நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சமூக ஊடகங்களில் விசேட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.**

**அத்தகைய மூடலின்போது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகள் குறித்தும் தனது கருத்துக்களையும் அவர் தெரிவித்துள்ளார்.**

**சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தவும் அரசிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.**

### யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒப்படைக்கப்பட்ட வயோதிபப் பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி, கம்பர்மலையைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று பிற்பகல் சடலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவரது சடலத்தில் பெறப்பட்ட மாதிரியில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலை பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உயிரிழந்த இருவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை ஊடாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 24 வயதுடைய இளைஞர் இருவருக்கும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உயிரிழந்த 68 வயதுடைய ஆண் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே யாழ். கோண்டாவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி பா. மார்க்கண்டு என்பவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றை சோதனையிட முயன்றபோது, சந்தேக நபர்கள் கஞ்சா போதைப்பொருள் பொதிகளை கடலில் வீசியுள்ளனர்.

இருந்த போதிலும் விரைந்து செயற்பட்ட கடற்படையினர் கடலில் வீசப்பட்ட கஞ்சா போதைப் பொருள்களை மீட்டனர்.

அதையடுத்து படகில் இருந்த இருவரையும் கைதுசெய்த கடற்படையினர், அவர்களைப் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அதேவேளை, மீட்கப்பட்ட கஞ்சா போதை பொருள் மற்றும் படகையும் பொலிஸாரிடம் கடற்படையினர் பாரம் கொடுத்துள்ளனர்.

### இலங்கையில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நேற்று 2 ஆயிரத்து 139 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

அதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 51 ஆயிரத்து 69 ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### யாழில் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறுக்குத் தெரு மற்றும் திலுநெல்வேலி சிவன் அம்மன் ஆலய சூழல்களில் அதிகாலை 5 மணி முதல் காலை 10 மணிவரை போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு வாகன நெரிசலை ஏற்படுத்தும் வகையில் வியாபாரிகளும் வாடிக்கையாளர்களும் குவிகின்றனர்.

இதேவேளை, சந்தைக் கழிவுகளும் அப்பகுதிகளிலேயே வீசப்படுகின்றமையால் அப்பகுதியில் பெரும் அசௌகரியம் ஏற்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### வடக்கில் முதன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

விபத்தால் மூளைச்சாவடைந்து இணுவிலைச் சேர்ந்த தங்கராசா பிரிஞ்சன் என்ற இளைஞரின் இரண்டு சிறுநீரகங்களும் இரண்டு நோயாளிகளுக்குத் தலா ஒன்று என மாற்றப்பட்டன.

சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் உயிர் வாழ்ந்த இருவருக்கும் சிறுநீரகங்கள் வெற்றிகரமாக சத்திரசிகிச்சை வல்லுநர்கள், உணர்வழியியல் வல்லுநர்கள், சிறுநீரக வல்லுநர்கள் மூலம் மாற்றப்பட்டன. கண்டியிலிருந்து சத்திரசிகிச்சை வல்லுநர் ஒருவர் அழைத்து வரப்பட்டு உதவிகளும் பெறப்பட்டன.

அதிகரித்த கொரோனா நோயாளர்கள் மத்தியிலும் கடந்த 18ஆம் திகதி சிறுநீரக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பலமணி நேரத்தையும் தாண்டி வெற்றிகரமாக நடைபெற்றது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் ச.ஸ்ரீபவனந்தராஜா தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலே, வடக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தனிநபர் என்பதை தாண்டி ஒருங்கிணைந்து எல்லோருடைய கூட்டு முயற்சியால் வெற்றிகரமாக அமைந்ததென சத்திரசிகிச்சையில் பங்கேற்ற மருத்துவ வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர்.

இனி வருங்காலங்களில் இதனை மேற் கொள்வதற்கு நாங்கள் ஒருசில கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். இது பற்றிய போதிய அறிவு இருந்தும் ஆளணிப் பற்றாக்குறை, கட்டமைப்பின்மை போன்ற பல சிக்கல்களால் இதனைச் செய்ய முடியாமல் இருந்தது. இவை காலப்போக்கில் சரிவரும்போது இதனைத் தொடர்ந்து செய்ய முடியும் என்றும் வைத்திய வல்லுநர்கள் குறிப்பிட்டனர்.

சிறுநீரகம் இரண்டையும் தானமாக வழங்க முன்வந்த குறித்த இளைஞரின் பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் வைத்திய வல்லுநர்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

## அரசு - கூட்டமைப்பு பேச்சு; மனோ எம்.பியின் கருத்து

அரசு - கூட்டமைப்பு பேச்சு நடத்த முன் தயாரிப்பு வேலைகள் நடக்கின்றன. அதற்கு முன்னரே பேச வேண்டாம், பேச வேண்டாம் எனக் குரலும் கேட்கின்றது. அவசியமானால், நாம் சாத்தானுடன்கூட நேரில் பேசியே ஆக வேண்டும்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு விவகாரம் தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாம் வாக்களித்திருந்தாலும், இல்லாவிட்டாலும் கூட அவர் இந்நாட்டு ஜனாதிபதி. இது அவரது அரசு. ஆகவே, இந்த அரசுடன் பேசத்தான் வேண்டும்.

ஆனால், இந்தப்பேச்சுகளை ஜி,எல். பீரிஸ் என்ற மனிதரை முன்னிலைப்படுத்தி நியாயப்படுத்த முனைவது அத்துனை அறிவுடைமை அல்ல.

அவர் ஒரு சிநேகபூர்வ மனிதர்தான். அவரது பார்வை நெகிழ்வுதன்மை கொண்ட பார்வைதான். ஆனால், அவர் இங்கே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரதிநிதி. அதைப் பேசப்போகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனதில் கொள்ளும் என நம்புகின்றேன்.

அதேவேளை, பேசவே வேண்டாம் எனக் கூறும் தரப்புகள், கூட்டமைப்பை விட்டு விட்டு, இந்தப் பேச்சுகளின் பின்புலத்து தரப்பை நோக்கிதங்கள் கேள்விகளைத் திருப்ப வேண்டும்.

அதுதான், அமெரிக்கா. அதன் இலங்கை பிரதிநிதி அலைனா டெப்லிட்ஸ்.

தமிழ் அரசியல் கைதிகள், ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்பு, அரசமைப்பின் 13ஆவது திருத்தம், மாகாண சபைத் தேர்தல், 16ஆவது திருத்தம், மொழியுரிமைகள் ஆகியன இன்றுள்ள சட்டங்களின் அடிப்படையில் செய்யக்கூடிய குறைந்த பட்ச விடயங்கள்.

இவற்றை செய்ய அரசுக்கு உரிய அழுத்தங்களை அலைனா டெப்லிட்ஸ் கொடுக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்காவின் சடுதியான வாபஸ் நிறையப் பேரை யோசிக்க வைக்கின்றது. தங்கள் காரியம் ஆனாலோ, ஆகா விட்டாலோ, திடீரென கைவிட்டு விடுவார்களோ என்ற அச்சம் இப்போது, அமெரிக்க நண்பர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் வருவதால், இந்தச் சந்தேகம் இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் அதிகரிகின்றது - என்றார்.

## யாழ். அரச அதிபர் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

மாவட்ட அரச அதிபரின் பணிக்குழாமிலுள்ள அலுவலக உதவியாளர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, சங்கானை பிரதேச செயலர் திருமதி பிரேமினிக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிகிச்சைக்காக வைத்தியசா லைக்குச் சென்றபோது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# அரசின் மனிதாபிமானமற்ற தன்மையை தற்போது விளங்கிக் கொள்ள முடிகிறது



கொவிட் -19 வைரஸ் தாக்கத்தால் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உள்ளடங்கிய 10 ஆயிரம் பெறுமதியான நிவாரணப் பொதியை மட்டுப்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மட்டும் நிவாரணப் பொதியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனூடாக அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற தன்மையை விளங்கிக் கொள்ள முடிகிறது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

கொவிட் தாக்கத்தை கருத்திற் கொண்டு மூடப்பட்ட பல நாடுகள் தங்கள் மக்களின் வாழ்க்கையை நிலையை அறிந்து நிவாரணப் பொதிகளை வழங்கியுள்ளன.

ஆனால் இலங்கையில் நடப்பது என்னவென்றால் எங்கள் செல்வாக்கின் காரணமாக மக்களுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்ச நிவாரணப் பொதி கூட நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களும் தியாகம் செய்ய வேண்டும். என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் கொவிட் வைரஸ் அச்சுறுத்தல் தொடங்கிய நாளிலிருந்து மக்கள் செய்த தியாகங்களை அரசாங்கம் பார்க்கவில்லை என்பது போலவும் தெரியாது என்பது போலவும் இருப்பதை நம்பமுடியாதுள்ளது.

மக்களை தியாகம் செய்யுமாறு கேட்கும் அரசாங்கமே அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையை வரலாறு காணாத அளவுக்கு உயர்த்தியுள்ளது.

மக்களை தியாகம் செய்யுமாறு கோரும் அரசாங்கமே உணவு செலவளிப்பின் ஆற்றலில் உலகில் மிகவும் வறிய ஐந்தாவது இடத்துக்கு நாட்டைக் கொண்டு சென்றுள்ளது. நாட்டு மக்கள் தங்களின் ஊதியத்தில் 66 சதவீதத்தை உணவிற்காக செலவழிக்கும் நிலையை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

செல்வந்தர்களுக்கு வரிச்சலுகை அளித்து நாட்டுக்கு 60 கோடி ரூபா வருவாய் பறிபோக காரணமாக இருந்த இந்த மக்கள் தியாகம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றமை வேடிக்கையாகவுள்ளது.

ஒரு நாளைக்கு மூன்று வேளை போக ஒரு வேளை உணவைக் கூட உண்ணாமல் பெருமூச்சு விடும் நூறாயிரக்கணக்கான மக்கள் வசிக்கும் ஒரு நாட்டில் தியாகம் செய்யுமாறு மக்களிடம் கேட்பதை விட பெரிய கோரிக்கை எதுவும் இல்லை.

கொரோனா பேரழிவின் மத்தியில் வாழ்க்கைக்கும் இறப்புக்கும் மத்தியில் போராடும் மக்களின் நிவாரணப் பொதிக்கும் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால் இந்த அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற தன்மையை உணர்ந்து கொள்ள முடிகிறது. - என்றார்.

# குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிவாரணப் பொதி

சுகாதாரத் துறையினரின் ஆலோசனையின்பேரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாத்திரம் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


கொரோனா வைரஸ் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் பொதிகளையே இவ்வாறு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு அமைய செயற்படுமாறு, பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 30 வயதுக்கு மேல் 51 வீதமானோருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன

## இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தகவல்



இலங்கையில் 30 வயதுக்கு மேற்பட்டோரில் 51 வீதமானோருக்கு இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த நிலையில், 60 வயதிற்கு மேற்பட்டோர் விரைவில் தங்களுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

தடுப்பூசி ஏற்றும் மத்திய நிலையங்களுக்குச் செல்ல முடியாத 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு வீடுகளுக்கே சென்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டமை; உறுதிப்படுத்த டிஜிற்றல் அட்டை விநியோகம்



கொரோனா வைரஸுக்கு எதிரான இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தும் டிஜிற்றல் அட்டை விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதியின் பின்னர் இந்த டிஜிற்றல் அட்டைகளை விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

15



**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00
இரண்டாம் இடம் - ரூபா 5,000.00
மூன்றாம் இடம் - ரூபா 3,000.00
தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. சுப்பிரமணிய தோத்திர விருத்தம் எந்த ஈழத்துக் குமராலயத்தைப் போற்றிப் பாடப்பட்டது?**

.................................................................

**2. கந்தபுராணத்தில் எத்தனை பாடல்கள் உள்ளது?**

.................................................................

**3. கந்தர் அனுபூதியைப் பாடியவர் யார்?**

.................................................................

**4. 'ஷண்மம்' என்பதன் பொருள் என்ன?**

.................................................................

**5. முருகப்பெருமான் சிங்கமுகனை வதஞ்செய்த இடம் எது?**

.................................................................

சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்

15

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ----------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------
5. முகவரி : ----------------------------------------

.........................................
கையொப்பம்

# ஆப்கான் ஜனாதிபதியை விட வேகமாக கோட்டா நாட்டை விட்டு ஓடிவிடுவார்!

## பௌத்த பிக்கு ஆருடம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலோடு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும், அவர்களை தூக்கிலிடுவோம் எனக் கூறி தான் இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? ஈஸ்டர் தாக்குதல் பற்றி பேச்சே இல்லை என தேவாலஹிந்த அஜித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நாட்டை அபிவிருத்தி செய்யும், இவர்கள் வந்தால் இனப்பிரச்சினை இருக்காது, தீவிரவாதம் இருக்காது, இனவாதம் இருக்காது, அனைவருக்கும் சட்டம் பொதுவாக செயற்படுத்தப்படும், குற்றவாளிகளுக்கு இடம் இருக்காது, வெளிநாடுகளைப் போன்று ஒரு சிறந்த நாடாக இலங்கையும் மாறும் என்று நம்பி இவர்கள் கோட்டாபய ராஜ பக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வந்தார்கள்.

இது ஒரு கண்கட்டு வித்தை, இவர்களை ஆட்சிக்கு கொண்டுவராதீர்கள் என நாங்கள் அன்றே சொன்னோம். பல கொலைகளுடன் தொடர்புடையவர்கள், இவர்கள் பல மோசடிகளுடன் தொடர்புடையவர்கள், இவர்கள் பல கொள்ளைகளுக்குத் தொடர்புடையவர்கள், இவர்கள் நாட்டு மக்கள் மீது அன்பில்லாதவர்கள், இவர்கள் வெளிநாடுகளில் பல வியாபாரங்களை செய்பவர்கள், ஆகவே இவர்களை ஆட்சிக்கு கொண்டு வர வேண்டாம், இவர்கள் ஆட்சிக்கு வந்தால் நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என நாம் அன்றே சொன்னோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் நாம் சொன்னதைக் கேட்காமல் மக்கள் இவருக்கு ஆட்சி பலத்தை கொடுத்தார்கள். தற்போதைய ஜனாதிபதிக்கும், இந்த அரசாங்கத்துக்கும் இந்த ஈஸ்டர் தாக்குதலோடு தொடர்பு உள்ளது என ஒரு கதை கூறப்படுகின்றது. ஆட்சியைக் கைப்பற்ற செய்த ஒரு செயல் எனப் பேசப்படுகின்றது.

இதனால் கர்தினால் இப்பொழுது இந்த விடயத்தை சர்வதேசத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளார். கர்தினால் இவரை நம்பி ஏமாந்து விட்டார்.

அவர் மாத்திரம் அல்லர், இந்த ஜனாதிபதியை நம்பிய அனைவருமே இன்று ஏமாந்து விட்டனர். நாளை ஒரே நேரத்தில் 50 ஆயிரம் பேர் ஒன்றாக வீதியில் இறங்கி இவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தால் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியை விட வேகமாக இவர் நாட்டை விட்டு அமெரிக்காவுக்கு ஓடி விடுவார்.

மக்களுக்கு அதை செய்ய முடியும். அந்த பலம் மக்களிடம் உள்ளது. ஆனால் மக்களுக்கு அது தெரியவில்லை. இந்தக் கோட்டாபயவுக்கும் நீங்கள் பயப்படத் தேவையில்லை. உங்கள் பலத்தைத் தான் அவருக்கு நீங்கள் கொடுத்துள்ளீர்கள். ஆகவே அச்சமடையத் தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாத் தடுப்பூசியே மக்களுக்கு அடைக்கலம்!

இப்படிக் கூறுகின்றார் இராணுவத் தளபதி



கொரோனாத் தொற்றிலிருந்து நாம் மீண்டெழ தடுப்பூசியே ஓர் அடைக்கலமாக உள்ளது. அந்தவகையில், கொரோனாத் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக்கொண்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொகை நூற்றுக்கு 51 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

'மேலும் பத்து லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்துள்ளன. அவை நாட்டின் 15 மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக 60 ஆயிரம் தடுப்பூசிகள் குருநாகல் மாவட்டத்துக்கும், ஒரு லட்சத்து 10 ஆயிரம் தடுப்பூசிகள் காலி மாவட்டத்துக்கும், 80 ஆயிரம் தடுப்பூசிகள் மாத்தறை மாவட்டத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி, பதுளை ஆகிய மாவட்டங்களுக்கும் தலா 80 ஆயிரம் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கு தலா 75 ஆயிரம் தடுப்பூசிகளும், களுத்துறை மாவட்டத்துக்கு 50 ஆயிரம் தடுப்பூசிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. - என்றார்.

# சிறுவர்களுக்கு ஏற்படும் இரண்டு புதிய நோய்கள்

கொரோனாத் தொற்றுறுதியான சிறுவர்களுக்கு ஏற்படும் இரண்டு புதிய நோய் நிலைமைகள் தொடர்பில், சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் கண்டறியப்பட்டுள்ளது.

சைலண்ட் ஹைபொக்ஸியா மற்றும் மெ - சித்தமெட்டிக் நியூமோனியா முதலான இரு நோய்களே இவ்வாறு கண்டறியப்பட்டுள்ளதாக சிறுவர் விசேட வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வயதுமுதிர்ந்தவர்களிடையே மாத்திரம் பெருவாரியாக அடையாளம் காணப்பட்ட இந்த நோய் நிலைமை தற்போது கொரோனாத் தொற்றுதியான சிறுவர்களிடமும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் சிறுவர் விசேட வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# சாராவை மறந்த அரசாங்கம் நினைவூட்டும் முஜிபுர் ரஹ்மான்

பயங்கரவாதி சஹ்ரானுக்கு ஆணை பிறப்பித்தவர்கள் தொடர்பாக அறிய அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் சந்தேக நபராகக் கருதப்படும் சாரா உயிருடன் உள்ளார் என்பதை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. எனினும் சாராவை கண்டுபிடிப்பதற்கான முயற்சியை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சாரா என்ற ஒருவர் இருந்தார் என்பதை அரசாங்கம் மறந்து விட்டது. பயங்கரவாதி சஹ்ரானுக்கு ஆணை பிறப்பித்தவர்கள் தொடர்பில் அறிய அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மங்கள சமரவீரவின் மரணத்தை முன்கூட்டி கணித்த பெண் பிக்கு!

இலங்கையில் முக்கிய பிரமுகர் ஒருவர் விரைவில் மரணிக்கவுள்ளார் என்று எதிர்வுகூறலை வெளியிட்ட பெண் பௌத்த பிக்கு ஒருவரது காணொலி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கண்டி - பல்லேகலையிலுள்ள கோதமி விகாரையின் பிரதான பெண் பிக்குவாகிய கம்மட்டாச்சாரி கோதமீ தேரர் கடந்த ஜூலை மாதம் 03 ஆம் திகதி சமூக வலைத்தளமொன்றில் நடத்தப்பட்ட நேர்காணலில் பங்கேற்றிருந்தார்.

அதன்போது கருத்து வெளியிட்டிருந்த அவர் -

'இலங்கையில் அனைவராலும் அறியப்பட்ட பிரபல அரசியல்வாதி மரணிக்கப்போகின்றார். அவர் அரசியலுக்கு ஆற்றிய சேவை மதிக்கத்தக்கது. உலகமும் அவர்பற்றி பேசும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், கொவிட் தொற்றுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தேறி வந்த நிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர உயிரிழந்தார்.

இந்நிலையில் அவர் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவைப்பற்றியே ஆருடம் வெளியிட்டிருந்தார் எனப் பலரும் கூறுகின்றனர்.

# மதுவரித் திணைக்களத்தின் 10 பிரிவுகள் இழுத்து மூடல்

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் 21 பேர் இனங்காணப்பட்டமையால், மதுவரித் திணைக்களத்தின் தலைமையகத்தில் 10 பிரிவுகள் மூடப்பட்டுள்ளன என்று குறித்த திணைக்களத்தின் ஆணையாளர் கபில குமாரசிங்க ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மதுவரித் திணைக்களத்தின் தலைமையகத்தில் 90 சதவீதமான பிரிவுகள் மூடப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கும் மேலதிகமாக கொரோனா வைரஸ் பரவலின் அவதான நிலைமையைக் கருத்தில்கொண்டு நாடளாவிய ரீதியில் மதுவரித் திணைக்களத்தின் பல பிரிவுகள் மூடப்பட்டுள்ளன என்று இலங்கை மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருந்த மதுவரித் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில், மதுவரித் தலைமையகத்தின் மூடப்படாத பிரிவுகளின் நடவடிக்கைகள் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் திணைக்களத்தின் ஆணையாளர் கபில குமாரசிங்க மேலும் கூறியுள்ளார்.

# சேவையை மீள ஆரம்பிக்கும் எமிரேட்ஸ் விமான நிறுவனம்

கொழும்புக்கும் - மாலை தீவின் மாலேயிக்கும் இடையிலான சேவையை எமிரேட்ஸ் விமான நிறுவனம் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கை மற்றும் மாலை தீவின் சுற்றுலாத்துறையை மீண்டும் மேம்படுத்தும் வகையில் இந்த சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

டுபாய்க்கும் மாலேயிக்கும் இடையிலான சேவையே கொழும்புக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

இதன்படி டுபாயில் இருந்து கொழும்புக்கு பயணிக்கும் விமானம், மாலேயின் ஊடாக மீண்டும் டுபாய்க்கு திரும்பவுள்ளது.

இதனையடுத்து, எதிர்வரும் ஒக்ரோபர் முதல் எமிரேட்ஸ் விமானம் மாலேய்க்கும் டுபாய்க்கும் இடையிலான சேவையை நாள் ஒன்றுக்கு நான்காக அதிகரிக்கவுள்ளது.

எமிரேட்ஸ் விமான நிறுவனம் தற்போது உலகளாவிய ரீதியில் 120 பயணிகள் சேவைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோடிக் கணக்கான தனது பணத்தை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் வர்த்தகர்!



வர்த்தகர் ஒருவர் ஏழை மக்களுக்கு தனது சொந்தப் பணத்தை உதவித் தொகையாக அன்பளிப்பு செய்ய முன்வந்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் அன்றாடம் உழைத்து உண்ணும் மக்கள் மற்றும் குறைந்த வருமானம் கொண்டவர்கள் என பலர் அதிக சிரமத்திற்குள்ளாகியிருக்கின்றனர்.

இந்த நிலையிலேயே மேற்படி வர்த்தகர் தனது சொந்தப் பணத்தை மக்களுக்கு தானமாக வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த மஞ்சுள பெரேரா என்ற வர்த்தகரே தனது சொந்த நிதியில் இருந்து சுமார் இரண்டரைக் கோடி ரூபாவை மக்களுக்கு பகிர்ந்தளிக்கிறார்.

ஒருவருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் அவர் வழங்குகிறார். அவரிடம் பண உதவி பெற மக்கள் கூட்டம் வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2021 இல் வெளியிடப்பெற்றது.